(ஆ) தென்னாற்காடு மாவட்டம், திருவெண்ணெநல்லூர் தி. எடையார் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து குறித்தும், அரசு உதவி செய்யாத நிலை குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "தென்னாற்காடு மாவட்டம், திருவெண்ணெநல்லூர் அருகில் உள்ள 'தி. எடையார்' கிராமத்தில் 31—7—1977, ஞாயிறு அன்று காலை 10-30 மணிக்கு ஏற்பட்ட தீ விபத்தில் 200 வீடுகள் எரிந்து சாம்பலானது பற்றியும், சுமார் இரண்டு லட்சம் பொருள் சேதம் பற்றியும், அரசு அதிகாரிகள் எந்த உதவியும் செய்யாத நிலை பற்றியும் விவாதிக்க" பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று, திரு. மு. அம்பிகாபதி அவர்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாயின்ட் ஆப் ஆர்டர். இதே பிரச்னையைப் பற்றி நான் ஒரு கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளேன். அதையும் இதோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சேர்த்துக் கொள்கிறேன்.

* திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் "தி. எடையார்" என்கிற கிராமத்தில் இந்த தீ விபத்து சம்பவம் நடந்திருக்கிறது. கிராமத்தில் சுமார் 200 வீடுகளுக்கு மேல் எரிந்து நாசமாகி இருக்கின்றன. சுமார் இரண்டு லட்சம் ரூபாய் சொத்து மதிப்பு நாசப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட கடுமையான நிலை ஏற்பட்ட பிறகும், அரசாங்க அதிகாரிகள் எந்தவிதமான உதவியும் செய்வதற்கு முன் வரவில்லை என்ற தகவல் கிடைத்திருக்கிறது. இங்கே இருக்கிற சாதாரண மக்கள் மிகவும் சிரமப்படுவதாகவும் வீடு இழந்தவர்களுக்குப் போதிய பாதுகாப்பான நடவடிக்கைகள் அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் எடுக்கவில்லை என்றும் தகவல் வந்திருக்கிறது. அதன் மீது அரசாங்கத்தினுடைய கவனத்தைக் கொண்டு வருகிற முறையில் அங்கு எத்தகைய உதவிகளைச் செய்ய வேண்டும். அந்த வீடுகளை இழந்தவர்களுக்கு ரூபாய் அறுபதோ, துணிமணிகளுக்கு ரூபாய் இருபதோ கொடுத்தால் போதாது என்பதை எல்லாம் பற்றி துல்லியமாக விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டம் திருவெண்ணைநல்லூர் தி. எடையார் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து குறித்தும் அரசு உதவி செய்யாத நிலை குறித்தும்

[திரு. மு. அம்பிகாபதி] [1977 ஆகஸ்டு 4

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவெண்ணைநல்லூர் அருகிலுள்ள தி. எடையார் கிராமத்தில் ஹரிஜன மக்கள் வாழும் பகுதியில் ஒரு தீ விபத்து 31—7—1977 அன்று ஏற்பட்டது. அந்தத் தீ விபத்து தற்செயலாக நடந்த ஒன்றாகும். ஒரு வீட்டில் சமையல் செய்து கொண்டிருக்கும் போது கூரையில் தீப்பிடித்து, அருகிலுள்ள மற்ற வீடுகளுக்கும் பற்றிக் கொண்டது. திருக்கோவிலூர், பண்ருட்டி ஆகிய இடங்களிலிருந்து தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று தீயை அணைத்து மேலும் பரவாமல் தடுத்தனர். இவ்விபத்தினால் 125 கூரை வீடுகள் எரிந்து சாம்பலாயின. 153 குடும்பங்கள் வீடிழந்தன. விபத்தினால் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு ரூபாய் 35,825. உயிர்ச் சேதம் எதுமில்லை.

திருக்கோவிலூர் கோட்டாட்சித் தலைவர், மற்றும் வட்டாட்சித் தலைவர் ஆகியோர் விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டு விபத்தால் பாதிக்கப்பட்டவர்களை அருகிலுள்ள இரண்டு பள்ளிகளில் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்தனர். கோட்டாட்சித் தலைவர் மூன்று மூட்டைகள் அரிசி சேகரித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆகஸ்ட் ஒன்றாம் தேதியும், இரண்டாம் தேதியும் விநியோகம் செய்தார். 1—8—1977 அன்று திருக்கோவிலூர் கோட்ட வளர்ச்சி அதிகாரி விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டார். திருவெண்ணைநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலரும் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுப்பதற்காக அரிசி முதலியன சேகரித்துக் கொண்டிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக ரூபாய் 10,440 அனுமதியளித்துள்ளார். இது தவிர, திருக்கோவிலூர் அரிமா சங்கம் ரூபாய் 100-ம் டேனிஷ் மிஷன் மருத்துவமனை நிர்வாகிகள் ரூபாய் 120-ம் அளித்துள்ளனர்.

அதிகாரிகள் எந்த உதவியும் செய்யவில்லை என்று கூறுவது சரியல்ல. மேற்கொண்டு தேவையான நிவாரணப் பணிகளை அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியின் பேரில், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS